# வேலூர் மாநகராட்சி

## வேலூர் மாநகராட்சி மையஅலுவலகத்தில் தனி அலுவலரின் மாமன்ற அவசரக் கூட்டம் நாள் : 12.02.2020 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும்

## மாமன்ற கூட்டப்பொருள்

(1) வேலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட விருதம்பட்டு, கழிஞ்சூர், காந்திநகர் (கிழக்கு மற்றும் மேற்கு), காங்கேயநல்லூர், பழைய காட்பாடி, விருபாட்சிபுரம், தொரப்பாடி, இடையன்சாத்து மற்றும் ஓட்டேரி(வார்டு எண் 6 முதல் 15 வரை, 42 முதல் 44 வரை (முழுவதுமாக) வார்டு எண் 4,33,37,39,40,41,45,46,49,50,51 மற்றும் 52 (பகுதியாக) பகுதிகளில் Atal Mission for Rejuvenation and Urban Transformation – 2016-17 (AMRUT - 2016-17), மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி (Asian Devlopment Bank) நிதிவுதவியுடன் வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் Phase-III திட்டத்தினை செயல்படுத்திட அரசாணை எண்: G.O (Ms) No.5 MA&WS(MA2) Department நாள்: 22.01.2018-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து பின்வரும் நிதி திட்டமிடல் அமைப்பில் (Funding Pattern) ஆசிய மேம்பாட்டு வங்கியிடமிருந்து நிதி உதவியாகவும், கடனாகவும் நிதியினை பெறுவதற்கு தமிழ்நாடு நகர் புற உட்கட்டமைப்பு நிதி மேம்பாட்டு கழகம் (TNUIFSL) மூலம் திட்டத்தினை செயல்படுத்திடவும், TNUDF / Project/TNUFIP-T2/Vellore UGSS – Phase-III நாள்:13.01.2020 கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :-

**Project Cost as per ADB:** (Rs.in crores)

| | |
|---|---|
| Contract Package Cost including GST @ 12% (Base cost) | 261.40 |
| Labour Welfare Fund (1% of Base Cost) | 2.61 |
| Physical Contingencies | 13.07 |
| Price Contingencies | 22.51 |
| Provisional Items (Utility shifting, resettlement Etc.,) | 11.77 |
| **Total Sub Projcet Cost** | **311.36** |

(i) To take up Underground Sewerage Scheme in Vellore Corporation Phase-III under ADB assisted TNUFIP Tranche-2 with the following means of finance, deposit and tariff:

a) **Means of Finance:**

| Sl.No. | Details | Amount (Rs. In Crore) | Perentage |
|---|---|---|---|
| 1. | GoI Share under AMRUT | 124.13 | 39.87% |
| 2. | Go TN Share under AMRUT | 49.65 | 15.95% |
| 3. | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP(T-2) | 38.00 | 12.21% |
| 4. | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under ADB assisted TNUFIP (T-2) | 61.34 | 19.70% |
| 5. | ULB Contribution | 38.24 | 12.27% |
| | **TOTAL** | **311.36** | **100.00%** |

b) **Proposed TNUIFSL Deposit & Tariff :**

| **Plinth Area of Assessment in Sq.ft.** | **Proposed Deposit (Rs.)** | | **Proposed Tariff (Rs./month)** | |
|---|---|---|---|---|
| | **Domestic** | **Non Domestic** | **Domestic** | **Non Domestic** |
| Upto 500 Sq.ft | 7500.00 | 15000.00 | 100.00 | 300.00 |
| 501 – 1200 Sq.ft | 10000.00 | 20000.00 | 140.00 | 420.00 |
| 1201 – 2400 Sq.ft | 12500.00 | 25000.00 | 180.00 | 540.00 |
| 2401 | 15000.00* | 30000.00* | 220.00* | 660.00* |
| **Wt. Average** | **10284.00** | **20111.00** | **145.00** | **423.00** |
| *This is the Base rate for the plinth area of 2401sq.ft The deposit and tariff for plinth area above 2401 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

இத்திட்டத்தில் மேற்கண்டபடி சேவை கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை உயர்த்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாமன்ற தீர்மான எண்792 நாள்:30.08.2019-ல் அனுமதிக்கப்பட்ட சேவைக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை மாற்றி அமைத்து கீழ்கண்டபடி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| குடியிருப்பு | முன்வைப்புத் தொகை ரூ. | மாதம் சேவைக் கட்டணம் ரூ. | வணிக நிறுவனம் (ம) தொழிற்சாலை | முன்வைப்புத் தொகை ரூ. | மாதம் சேவைக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 500 சதுர அடிக்கு குறைவாக பரப்பளவு உள்ள கட்டிடம் | 8000.00 | 160.00 | 500 சதுர அடிக்கு குறைவாக பரப்பளவு உள்ள கட்டிடம் | 15000.00 | 300.00 |
| 501முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 10000.00 | 180.00 | 501முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 20000.00 | 420.00 |
| 1201முதல் 2400 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 12500.00 | 200.00 | 1200முதல் 2400 சதுர அடி வரை பரப்பளவு உள்ள கட்டிடம் | 25000.00 | 540.00 |
| 2401முதல் 3600 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடம் | 15000.00 | 300.00 | 2401முதல் 3600 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடம் | 30000.00 | 660.00 |
| 3601 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு ஒவ்வொரு 1000சதுர அடிக்கும் | 2500.00 | 100.00 | 3601 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு ஒவ்வொரு 1000சதுர அடிக்கும் | 5000.00 | 150.00 |
| | | | **சிறப்பினம்** | **150000.00** | **1500.00** |

எனவே மாமன்ற தீர்மானத்தின் படி கீழ்கண்ட விகிதபடி மாதாந்திர சேவை கட்டணம் மற்றும் வைப்புத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

| Plinth Area of Assessment in Sq.ft. | Proposed Deposit (Rs.) | Proposed Tariff (Rs./month) | |
|---|---|---|---|
| | Domestic | Domestic | Non Domestic |
| Upto 500 Sq.ft | 8000.00 | 160.00 | 300.00 |
| 501 – 1200 Sq.ft | 10000.00 | 180.00 | 420.00 |
| 1201 – 2400 Sq.ft | 12500.00 | 200.00 | 540.00 |
| 2401 | 15000.00* | 300.00* | 660.00* |
| **Wt. Average** | **10460.00** | **190.00** | **430.00** |

(ii) To contribute an amount of Rs.38.24 Crores equivalent to 12.27% of the project cost as own contribution during the construction period.

(iii) To increase the amount of deposit and tariff at the rate of 10% every 5 years.

(iv) To meet the Interest During Construction (IDC) from the General Fund of the Corporation.

(v) To improve the tax collection efficiency to not less than 80% within three years and maintain the same or above consistently in future.

.மேற்கண்ட கட்டண விகிதத்துடன் Principal Secretary & Managining Director, TNUDF அவர்களின் கடிதம் TNUDF/Project TNUFIP-T2/Vellore UGSS-Phase III, நாள்:13.01.2020-ல் தெரிவித்துள்ள மற்ற நிபந்தனைகளின் அடிப்படையில் பாதாள சாக்கடை (UGSS) Phase-III திட்டத்தினை செயல்படித்திடவும் TNUFIP குழு மூலம் அனுமதி பெறுவதற்கும் ஆசிய மேம்பாட்டு வங்கியிடமிருந்து (ADB) கடனாகவும், மானியமாகவும் நிதியினை பெற்றிட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

   மாமன்ற தீர்மான எண் 792 நாள் 30.08.2019-ல் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை நிர்ணயம் செய்துள்ளதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

| Plinth Area of Assessment in Sq.ft. | Proposed Deposit (Rs.) | | Proposed Tariff (Rs./month) | |
|---|---|---|---|---|
| | Domestic | Non Domestic | Domestic | Non Domestic |
| Upto 500 Sq.ft | 8000.00 | 15000.00 | 160.00 | 300.00 |
| 501 – 1200 Sq.ft | 10000.00 | 20000.00 | 180.00 | 420.00 |
| 1201 – 2400 Sq.ft | 12500.00 | 25000.00 | 200.00 | 540.00 |
| 2401 | 15000.00* | 30000.00* | 300.00* | 660.00* |
| **Wt. Average** | **10460.00** | **20435.00** | **190.00** | **430.00** |
| *This is the Base rate for the plinth area of 2401sq.ft The deposit and tariff for plinth area above 2401 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

2. திட்டம் மதிப்பீட்டில் 12.27% தொகையானது மாநகராட்சி பங்களிப்பாக 38.24 கோடி திட்ட பணிகளின் கட்டுமான பணிகள் நடைபெறும் போது மாநகராட்சி பங்களிப்பு செலுத்த வேண்டும்.
3. ஒவ்வொரு 5 வருடத்திற்கும் 10% சதவீதம் வைப்புத்தொகை கட்டணம் மற்றும் சேவைக்கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும்.
4. திட்டப் பணி கட்டுமானம் நடைபெறும் போது மாநகராட்சி பொது நிதியிலிருந்து வட்டி செலுத்தப்பட வேண்டும்.
5. அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் வரி வசூல் சதவீதத்தின் திறனை 80% எய்தியும் இதே நிலைமையிலேயோ அல்லது அதற்கு மேலோ வரிவசூல் திறனை தொடர் ஆண்டுகளில் எய்திடல் வேண்டும்.
6. இத்திட்டம் துவங்கும் பொழுது வைப்புத் தொகை பெற அனுமதிக்கலாம். திட்டம் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்த உடன் மாதாந்திர சேவைக் கட்டணம் வசூல் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம். ஏற்கனவே இணைப்பு பெற்றுள்ளவர்களுக்கும் இக்கட்டண மாறுதல்கள் அமுல் படுத்தும் நாள் முதல் பொருந்தும் என்பதனையும் ஏற்கலாம்.
7. இத்திட்டத்திற்கு ஆசிய மேம்பாட்டு வங்கியிடமிருந்து (ADB) கடனாகவும், மானியமாகவும் நிதியினை பெறவும் அனுமதிக்கலாம்.
8. மேற்படி திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு அனைத்து ஒப்பந்தங்களிலும் ஒப்பம் செய்வதற்கு ஆணையருக்கு, மாமன்றம் அதிகாரம் வழங்கலாம்.

**(ந.க.எண். 17903/2017/E1)**

(2) வேலூர் மாநகராட்சி மண்டலம்-2-க்குட்பட்ட வார்டு எண்.23-ல் பேஸ்-II இரண்டாவது பிரதான சாலையில் ஒதுக்குபுரமாக போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல் 10x15 சதுர அடி அளவில் ஆவின் பங்கு அமைக்க பொது மேலாளர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட், வேலூர் அவர்கள் அனுமதி கோரியுள்ளதை அடுத்து வருவாய் ஆய்வாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் குறிப்பில் இடத்தினை வழங்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த இடத்திற்கு மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்கள் இந்த காலி இடத்திற்க்கு மாத வாடகையாக ரூ.1100/- என நிர்ணயம் செய்துள்ளார். மேற்கண்ட இந்த இடத்தினை மாநகராட்சி குத்தகை நிபந்தனைகளின் படி பொது மேலாளர் ஆவின் பாலகம், வேலூர் அவர்களுக்கு மாதவாடகை அடிப்படையில் ஒப்படைக்க, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

ஆவின் பாலகம் அமைக்க 10x15 அளவில் காலியிடத்தை மாத வாடகை ரூ.1,100/-க்கு குத்தகை நிபந்தனைகளின் படி ஒப்படைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:4382/2018/A1/ம2**

(3) வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களிலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம். தொழில்வரி, பாதாள சாக்கடை நுகர்வோர் கட்டணம் மற்றும் கடை வாடகை ஆகியவற்றினை பொது மக்கள் உடனடியாக செலுத்த கோரும் அறிவிப்பு பலகைகள் மண்டலம்-1க்கு 1250 வீதம் மொத்தம் 5000 விளம்பர பலகைகள் வைக்கவும் அதற்கான செலவின தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. அவசரம் அவசியம் மற்றும் வரிவசூல் பணியின் முக்கியதுவம் கருதி மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.

(**ந.க.எண்**/6872/2017/A1)

(4) வேலூர் மாநகராட்சியில் அலுவலக உதவியாளர் நிலையில் பணிபுரிந்து வரும் திரு.ப சூரியா என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக ஆவடி மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் கோரி விண்ணப்பித்திருந்தார். இதன் தொடர்ச்சியாக இவரை அம்மாநாகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் அடிப்படையில் செல்வதற்கு ஆவடி மாநகராட்சியில் அலுவலக உதவியாளர் நிலையில் காலிப்பணியிடம் உள்ளதா என விவரம் கோரப்பட்டதில், ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது கடிதம் எண்:13291/2019/சி1 ல் அலுவலக உதவியாளர் பணியில் ஒரு பணியிடம் காலியாக உள்ளது என தெரிவித்துள்ளார். இதன்படி இவரை ஆவடி மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதலில் செல்வதற்கு ஏதுவாக மாமன்றம் உரிய தீர்மானம் நிறைவேற்றி ஆவடி மாநகராட்சிக்கு அனுப்பி வைக்க ஏதுவாக தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. இவர் தனது விருப்பத்தின் அடிப்படையில் ஒரு வழி பணிமாறுதல் கோரியுள்ளதனை ஏற்று அரசு ஆணை பிறப்பிக்கும் சூழ்நிலையில் இவரை அலுவலக உதவியாளர் நிலையில் கடைசியாக முன்னுரிமைப்பட்டியலில் வைக்கலாம்.
3. இவருக்கு மாறுதல் பயணப்படி ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது.

(ந.க.எண்.4466/2019/சி1)

(5) வேலூர் மாநகராட்சி மண்டலம்-1ல் உள்ள வார்டு எண்:12ல் காந்திநகர் பகுதியில் உள்ள கிழக்கு முதல் பிரதான சாலையில் மேற்குபுறம் காலி இடத்தில் இருசக்கர, நான்கு சக்கர கனரக வாகனங்கள் நிறுத்தும் குத்தகை முடிந்த நிலையில் மீண்டும் இம்மாநகராட்சி 2020-2021 ஏல அறிக்கையில் சேர்க்கப்பட்டது. தற்போது மாடல் சிட்டி திட்டத்தில் Smart Road பகுதியில் அமைய உள்ளதால் பொறியியல் பிரிவில் இருந்து குறிப்பு பெறப்பட்டு இக்குத்தகை இனத்தினை 2020-2021 வருடத்திய ஏல அறிக்கையில் இருந்து நீக்கம் செய்ய வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மாமன்றம் பொருள் அனுமதிக்கலாம்

**இடம் : வேலூர்**

**நாள் : 12.02.2020**

**(க. கிருஷ்ணமூர்த்தி)**
**ஆணையாளர் (ம) தனிஅலுவலர்**
**வேலூர் மாநகராட்சி**